[31st January 1966]

MR. SPEAKER : It is a constitutional question.

**கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :** அரசாங்கம் அவர்களுக்குத் திருமணம் செய்து வைப்பதில்லை. அவர்களாகத் திருமணம் செய்துகொள்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு இல்லை. ஃபாமிலி பிளானிங் ப்ரோகிராமில் வாசக்டமி கூட செய்யப்பட்டு வருகிறது.

**கனம் சபாநாயகர் :** அவர்கள் திருமணம் செய்துகொள்ள விரும்புகிறார்கள். அதை எப்படித் தடுப்பது ?

*Pay of services in Forest Department*

* 28 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(a) whether there is any proposal before the Government to review and revise the scales of pay of services in Forest Department; and

(b) if so, the details thereof ?

THE HON. SRI N. NALLASENAPATHY SARKARAI MANRADIAR : (a) & (b) The reply is in the negative.

**திரு. வை. சங்கரன் :** இந்த ஃபாரஸ்ட் டிபார்ட்மெண்ட் அசோஸியேஷனிலிருந்து இது சம்பந்தமாக விண்ணப்பம், மெமோரண்டம் ஏதாவது வந்ததா ? அப்படியானால் அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** சில மெமோரண்டங்கள் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் பரிசிலனை செய்து கொண்டிருக்கிறது.

Ramanathapuram District Courts.

*29 Q.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Co-operation be pleased to state whether there is any proposal under the consideration of the Government to shift the Ramanathapuram District Courts now functioning at Madurai, to a place within the limits of the Ramanathapuram district?

**கனம் திரு. ந. நல்லசேனாபதி சர்க்கரை மன்றாடியார் :** இல்லை .

**திரு. செ. மாதவன் :** தலைவரவர்களே, இப்பொழுது மதுரை நகரிலே இராமநாதபுரம் மாவட்டத்தினுடைய நீதிமன்றம் இருக்கிறது. மதுரையிலே மஹாலிலே அது இருக்கிறது. அந்த மஹால் டேஞ்சரஸ் கண்டிஷனில் இருப்பதாக கனம் முதலமைச்சர் அவர்கள் கூட கூறியிருக்கிறார்கள். ஆகவே, புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. என்னுடைய மாவட்டத்தைச் சேர்ந்த நீதி மன்றத்தை என்னுடைய மாவட்டத்திற்கே மாற்றுவதற்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா ? புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஆகும் செலவுதான் இதற்கும் ஆகப்போகிறது. ஆகவே, மாற்றுவதற்கு ஏற்பாடு செய்வார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்:** இப்பொழுது அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை. பழைய பிரகாரம்தான் இப்பொழுது இருந்து கொண்டிருக்கிறது.

**திரு. வை. சங்கரன்:** இராமநாதபுரம் மாவட்டம் ஹார்ஸ் ஷூ மாதிரி விரித்து அமைந்திருக்கிறது. ஆகவே, அந்தமாதிரி மாற்றினால் ஒரு பக்கத்திலே உள்ளவர்கள், ஒரு தாலுக்காவிலே உள்ளவர்கள் எங்கள் பக்கத்தில் நீதிமன்றம் இல்லையே என்று கேட்பார்கள். ஆகவே, இப்பொழுது இருக்கிறபடியே மதுரை யிலேயே இருப்பதற்கு சர்க்கார் நடவடிக்கை எடுப்பார்களா?

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்:** இந்தப் பிரச்னைகளுக்கு இப்பொழுது பதில் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

**திரு. சா. கணேசன்:** கனம் அங்கத்தினர் திரு. சங்கரன் கூறியது போல் பிற தாலுக்காக்களில் உள்ளவர்கள் கேட்பார்கள், ஆகவே மதுரையில் வைக்க வேண்டுமென்று யாருமே விரும்பவில்லை. மதுரைக்கு வராமலே இராமநாதபுரம் ஜில்லா முழுவதையும் சுற்றுப்பிரயாணம் செய்வதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக் கின்றன. இராமநாதபுரத்தின் மத்திய பாகமாகிய மானமதுரை யிலே புதிதாகக் கட்டடங்கள் கட்டி அங்கே கோர்ட்டுகள் வைக்க லாமென்று ஏற்கனவே ஒரு ப்ரப்போஸல் இருந்ததே, அந்தப் ப்ரப்போஸலின் மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்க முன் வந்திருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார்** இதுபற்றித் தனிக் கேள்வி போட்டால் விவரம் சொல்லலாம்.

*Shifting of Sub-jail in Tiruchirappalli*

* 30 *Q.*—SRI M. KALYANASUNDARAM: }
SRI T. P. ALAGAMUTRU: } Will the hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether a final decision has been taken on the proposal to shift the sub-jail, Tiruchirappalli to the campus of the Central Jail; and

(*b*) if so, the details thereof?

**கனம் திரு. கோ. பூவராகன்:** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறிய தனிவகையான சிறைச்சாலையை அதன் தற்போதைய இடத்திலிருந்து திருச்சி மத்திய சிறையை அடுத்துள்ள ஓர் இடத்தில் கட்டப்படவிருக்கிற புதிய கட்டடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

**திரு. மீ. கலியாணசுந்தரம்:** சார், இந்த முடிவு எப்பொழுது அமலுக்குக் கொண்டுவரப்படும். இதற்கான கட்டட எஸ்டி மேட்டுகள் எல்லாம் தயார் செய்யப்பட்டு விட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.